# நான் அவரை அறிந்து கொள்வேன்




**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# *செய்தி:* **தேவன் மோசேயிடம் பேசினார்,** ஆகஸ்டு 31, 1953, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

ஃபன்னி கிராஸ்பி, அவள்... சில குற்றம் கண்டுபிடிப்பவர்கள் உள்ளே வந்து - எவ்வாறு என்று அவளிடம் கூறி, அவள் கிறிஸ்தவ பாடல்களையும் மற்றவைகளையும் பாடுவதை குறைகூறிக் கொண்டிருந்தார்கள்... உங்களில் அநேகருக்கு ஃபன்னி கிராஸ்பியைத் தெரியும், அவளைக் குறித்து அறிந்திருக்கிறீர்கள், இன்னுஞ் சரியாகச் சொன்னால், அவள் குருடான கவிஞர் பெண்ணாக இருந்தாள்: அவள் உலகத்திற்கு அதனுடைய மிகச்சிறந்த பாடல்களைக் கொடுத்திருக்கிறாள். நான் எப்பொழுதும் பீட அழைப்புகளில் பாடி வருகிற மிகவும் இருதயத்தைத் தொடுகிற பாடலாகிய, “கனிவான இரட்சகரே, என்னைக் கடந்து சென்று விடாதேயும்” என்ற பாடல் அநேகமாக ஃபன்னி கிராஸ்பினுடையதுதான், மற்றும் இருதயத்தை எளிதாக கிளர்ச்சியூட்டுகிற அந்தப் பாடல்கள் எல்லாவற்றையும் (பாடியிருக்கிறாள்).

ஏதோவொரு சமயத்தில்... ஒருசமயம் அங்கே யாரோஒருவர் கடந்துசென்று, "நீ மறுகரையில் இருந்திருப்பாயானால், நீ... அங்கே அப்படிப்பட்ட ஒரு இடமாக இருந்து... நீ அங்கேயும் குருடாக இருந்திருப்பாயானால், நீ எப்பொழுதாவது அவரை எப்படித்தான் அறிந்து கொண்டிருப்பாய்?" என்று கேட்டார்.

அதற்கு அவள், "நான் எப்படியும் அவரை அறிந்திருப்பேன்" என்று கூறினாள்.

"நீ அவரை எப்படி அறிந்திருப்பாய் என்று நினைக்கிறாய்?" என்று கேட்டார்.

"நான் அவருடைய கரங்களை தடவிப்பார்த்திருப்பேன்" என்றாள். பாருங்கள். அப்போது அவள் திரும்பி, தன்னுடைய நாற்காலிக்கு திரும்பி நடக்கத் துவங்கினபோது, அந்தப் பாடல் வந்தது:

*நான் அவரை அறிந்து கொள்வேன், ஆம், நான் அவரை அறிந்துகொள்வேன்,* (நீங்கள் அதைக் கேட்டிருக்கிறீர்கள்.)

*மீட்கப்பட்டு அவர் பக்கத்தில் நான் நிற்பேன்;*

*நான் அவரை அறிந்து கொள்வேன், ஆம், நான் அவரை அறிந்துகொள்வேன்*

*ஆணிகடாவப்பட்ட அவருடைய கைகளில் உள்ள காயத் தழும்புகளினால்.*

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★

ஃபன்னி கிராஸ்பி அவர்களின் வாழ்க்கை குறிப்பு:

- ✓ ஃபிரான்ஸஸ் ஜேன் வான் ஆல்ஸ்டின் என்ற ஃபன்னி கிராஸ்பி அவர்கள் அமெரிக்க கவிஞராகவும், பாடலாசிரியராகவும், இசைப்பாடல் ஆக்குவோராகவும் இருந்தார்.
- ✓ அவர்கள் 8000 க்கும் மேற்பட்ட ஸ்தோத்திர பாடல்களையும், சுவிசேஷ பாடல்களையும் எழுதியிருக்கிறார்கள்.

✓ 100 மில்லியன் பிரதிகளுக்கு மேல் அச்சிடப்பட்டுள்ளன. (1 மில்லியன் என்பது பத்து லட்சமாகும்.)

**பிறப்பு**: மார்ச் 24, 1820, ப்ரூஸ்டர், நியூயார்க், அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**இறப்பு**: பிப்ரவரி 12, 1915, பிரிட்ஜ்போர்ட், கனக்டிகட், அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**கணவர்**: அலெக்ஸாண்டர் வான் ஆல்ஸ்டின்

**பெற்றோர்கள்**: மெர்ஸி கிராஸ்பி, ஜான் கிராஸ்பி